DINAMALAR

5 APR 2023

PAGE 4

# சமுதாய கல்லூரியில் வணிகத் திருவிழா

புதுச்சேரி, ஏப். 5–

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் மூன்று நாள் வணிக திருவிழா நடந்தது.

கடந்த 29ம் தேதி துவங்கிய திருவிழா 31ம் தேதி வரை நடந்தது. துவக்க விழாவுக்கு, கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். வணிகவியல் துறை தலைவர் பாண்டு வரவேற்றார். புதுச்சேரி பல்கலை மேலாண்மையியல் துறை புலமுதன்மையர் மாளவிகா தியோ, வணிகவியல் துறை தலைவர் நடராஜன் சிறப்புரையாற்றினர். ஆம்பூர் சி.ஆர் ஷீஸ் நிர்வாக இயக்குனர் சந்தீப் ரெட்டி, தொழில் நுட்ப மைய தலைவர் அமித்நைன் வாழ்த்துரை வழங்கினர்.

ஐக்கிய நாடுகள் வளர்ச்சி அமைப்பின் 17 வது நிலையாகவுள்ள 8,9வது இலக்காக உள்ள தரமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி, தொழில், புத்தாக்கம், உள்கட்டமைப்பு ஆகியவற்றை அடைவதை அடிப்படையாக கொண்டு இந்நிகழ்ச்சி நடந்தது.

முதல் நாளில், புதிய தொழில் துவங்க பயிற்சியை சந்தீப்ரெட்டி அளித்தார். தொழில் மையம் தர்மசெல்வம் தலைமையில் பயிற்சி பட்டறை நடந்தது. இதில், சமுதாய கல்லூரி மற்றும் பிற கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். வணிக கோலப்போட்டி நடந்தது.

இரண்டாம் நாளில், புதிய தொழில் துவங்குதல், மாதிரி வணிக நிறுவனங்கள், வினாடி வினா, வார்த்தை உச்சரிப்பு மற்றும் சிறந்த மேலாளர் ஆகிய போட்டிகள் நடந்தது. மூன்றாம் நாளில் வணிக நிறுவனங்கள் சார்ந்த வர்த்தக விளம்பர நடிப்பு, வணிக இணைப்பு நிகழ்வுகள் நடந்தன. மாணவர்களுக்கு பலவித வணிகவியல் துறை சார்ந்த போட்டிகள் நடந்தது.

நிறைவு விழாவிற்கு இணை பேராசிரியர் பாண்டு வரவேற்றார். புதுச்சேரி பல்கலை நிகழ்த்துக்கலை புலத்தின் கல்விநிலைய துறை தலைவர் ஸ்ரீதரன் சிறப்புரையாற்றினார்.

போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை வணிகவியல் துறை ஆசிரியர் சிவசங்கரன் தலைமையில் மாணவர்கள் செய்திருந்தனர்.




புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் நடந்த மூன்று நாள் வணிக திருவிழாவை, முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.